පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක - 77

සෞඛ්‍ය අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல - 77

சுகாதார அமைச்சு

பாராளுமன்ற அரச கணக்குகள் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series Number – 77

Ministry of Health

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற தொடர் இல. - 77

நிறுவனத்தின் பெயர் - சுகாதார அமைச்சு

குழுவினால் கண்டறியப்பட்ட பிரச்சனைகள்	பிரச்சனைகளைச் சரிசெய்வதற்காக நிறு வனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை கள் மற்றும் தற்போதைய நிலைமை
மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ (Clinical) கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயல் திட்டம்	சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், சமூக மருத்துவ நிபுணர்கள், சுகாதார சேவை தொடர்பான நிறுவனங்களின் தலைவர்கள், சுற்றாடல் அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதி நிதிகள் ஆகியோரின் பங்களிப்புடன். சுகாதாரப் பாதுகாப்பு கழிவு முகாமைத்துவத் திற்கான தேசிய செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது கழிவு முகாமைத்துவ செயல்முறையை வலுப் படுத்துவதற்கான தேசிய செயற்திட்டத்தின் அடிப்படையில், மாகாண சுகாதார பாதுகாப்பு கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டம் தொடர் பான செயல்திட்டம் 09 மாகாணங்கள் தொடர் பில் தயாரிக்கப்பட்டது.
தேசிய செயல்பாட்டுக் கமிட்டி	2024 ஆம் ஆண்டுக்கான மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கான தேசிய செயல்பாட்டுக் கமிட்டிகுழு கூட்டம் ஜனவரி 11, 2024 அன்று நடைபெற்றது.
மருத்துவக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சுகாதார அமைச்சில் நடைமுறைப்படுத்தப் பட்ட திட்டங்கள்	அமைச்சரவையின் முடிவுகளின்படி, தொடர்பு டைய திட்டங்களுக்களின் பொருட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
தனியார் நிறுவனத்திற்கு மருத்துவக் கழிவு களை அகற்றுவதற்கான வாய்ப்பை வழங்கு வதன் மூலம் அரசுக்கு மிகப்பெரிய நிதி இழப்பு ஏற்படுதல்.	2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கையின் சுகாதாரத் துறையின் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மற்றும் அதற்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு உதவிகள், மானியங்கள் மற்றும் பெறப்பட்ட கடன்கள் மற்றும் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் என்பனவற்றின் விபரங்கள் உள்ளடக்கிய எழுத்திலான அறிக்கை 08.10.2024 ம் திகதியில் அரச கணக்குகள் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது
சரியானதொரு முறையில் கழிவு முகாமைத்து வத்தினை மேற்பார்வை செய்தல்.	மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் கழிவு முகாமைத்துவம் தொடர்பான மேற்பார்வை செயல்படுத்தப்படு கிறது.
குருநாகல் வைத்தியசாலையில் சேரும் மருத்துவ கழிவுகளை அகற்றுவதில் சிக்கல் நிலை	கணக்காய்வு கண்காணிப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு, 2022 இல் குவிந்த மருத்து வக் கழிவுகள் சிசிலி ஹனாரோ என்கேர் (Sicily Hanaro Encare) நிறுவனத்தால் அகற்றப்பட்டது. தற்போது, மருத்துவமனைகளிலுள்ள மற்றும் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள எரியூட்டி இயந்திரங்களினூடாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் வீரியம் கொண்ட மற்றும் தொற்று நோய்க் கழிவுகள் முகாமைத்துவம் செய்யப்படுகின் றது.
கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் பேக்கேஜிங் (packaging) தரமானதாக இல்லை.	சுகாதார அமைச்சு, “சிசிலி ஹனாரோ என்கேர்” நிறுவனம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றுடன் செய்து கொள்ளப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம் குறித்து சம்பந்தப்பட்ட சுகாதார நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட தகவலின் படி, 2023.06.22 ஆம் திகதிய DDG/E&OH/EH/16/2022 எனும் இலக்க கடிதத்தினூடாக "சிசிலி ஹனாரோ என்கேர்" நிறுவனத்தினூடாக மருத்துவக் கழிவுகள் அகற்றப்படும் மருத்துவ மனைகளின் தலைவர்களுக்கு, அந்த நிறுவனத் திற்கு அதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு அறிவிக்கப்பட்டது. அதன்படி, தொடர் புடைய பணத்தை மீள அறவிடுதல் பற்றிய முன்னேற்றம் அதன்படி, உரிய வைத்தியசாலைகளினால் அறவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கழிவு முகாமைத்துவம் தொடர்பான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்	2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, மருத்துவ மனைகளில் சேரும் கழிவு நீரை அகற்றும் முறைமையை நிறுவுதல் எனும் தலைப்பில் (Improvement of the Liquid Waste Disposal System in Healthcare Setting) மருத்துவமனைகளில் இருந்து மதிப்பீடுகள் கோரப்பட்டன. அதற்கமைவாக, அவிசாவளை மற்றும் ஹோமாகம ஆகிய மாகாண சபை வைத்தியசாலைகளுக்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஒன்றுக்கொன்று முரண்பாடான பரிந்துரைகள்	12.03.2012 ம் திகதி அனுப்பப்பட்ட அறிக்கையில், Metamizer இயந்திரங்கள் மூலம் மருத்துவக் கழிவுகளை மக்கும் தன்மையாக்குவதற்கு கிலோ கிராம் கழிவிற்கு 23 ரூபாய் ஆகும். சுகாதார அமைச்சினால் இயந்திரங்களின் சேவை பராமரிக்கப்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் இந்த கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், டிசம்பர் 12, 2013 திகதியில் அமைச்சு, BioMed International Pvt. இடையே சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.. அதனை அடிப்படையாக கொண்டு 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி அமைச்சரவைக்கு அனுப்பப்பட்ட குறிப்பில் கிலோகிராமொன்றிற்கான கழிவுகள் ரூ.212 என குறிப்பிடப்பட்டுள்ளது.
கழிவு முகாமைத்துவத்துக்கென தனியான நிறுவனம் ஒன்றை நிறுவுதல்	குழுவினது அவதானிப்புகள்/ பரிந்துரைகளின் படி, எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மருத்துவமனைகளிலுள்ள மருத்துவக் கழிவு களை அகற்றுவதில், அரசுக்கு ஏற்படும் நிதி இழப்புகள்	2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும்போது, நேரடி நோய்த் தொற்றுக் கழிவு சேமிப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக தேவையான மதிப்பீடுகள் (Construction, Expansion & Repair of the Healthcare Waste Storage & Ash Pit) கோரப்பட்டன. சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ஏற்கனவே செலவு தலைப்பு இல.111-1-5- 2001(11) இன் கீழ் ரூபா 7,188,316.87 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு ள்ளதுடன், செலவு தலைப்பு இல 111-1-5-2001(11) இன் கீழ் லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்திய சாலைக்கு ரூபா.118,800/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
தொகுப்பு முறையை (clustering system) செயல் படுத்துதல்	தற்போது, 09 மாகாணங்களுக்குரிய செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப் பட்டுள்ளதுடன், இந்த தொகுப்பு திட்டம் (cluster plan) தொடர்பான நடவடிக்கைகள் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் இந்த தொகுப்பு முறையை (clustering system) நடை முறைப படுத்தும் பொறுப்பு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

திட்ட செயல்பாட்டுக் கட்டணங்கள் (Project Operating Fees)	அவுஸ்திரேலியாவின் கடன் நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் மருத்துவ கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் செயல்பாடு களை மேற்கொள்ளும் பயோமெட் இன்டர் நேஷனல் பிரைவேட் லிமிடெட் (Biomed International PVT Ltd) சார்பாக செலுத்தப்பட்ட பணம் பற்றிய தகவல்கள் 2022.13.23 ஆம் திகதி அன்று அரச கணக்குகள் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.
மருத்துவ கழிவுகளை எரிப்பது தொடக்கம் மீதமுள்ள கழிவுகளை உள்ளூராட்சி அமைப்பு களால் அகற்றுதல்	மெட்டாமைசர் இயந்திரம் (Metamizer machine) மூலம் அகற்றப்படும் மீதமுள்ள கழிவுகளை அகற்றும் செயற்பாடு பின்வரும் 8 மருத்துவ மனைகளில் சிக்கலாக இருந்தது. 1. மாவட்ட பொது வைத்தியசாலை, கேகாலை 2. போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய 3. போதனா வைத்தியசாலை, இரத்தினபுரி 4. போதனா வைத்தியசாலை, அனுராதபுரம் 5. போதனா வைத்தியசாலை, பதுளை 6. மாவட்ட பொது வைத்தியசாலை, எம்பிலிப் பிட்டிய 7. தள வைத்தியசாலை, கரவனெல்ல 8. தள வைத்தியசாலை, மாரவில தற்போது, கேகாலை மாவட்ட பொது வைத்திய சாலை மற்றும், குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலைகளிலுள்ள மெட்டாமைசர் இயந்திரங்கள் மூலம் அகற்றப்படும் எஞ்சிய கழிவுகளை தொம்பேயில் உள்ள சுகாதார குப்பை கிடங்கிற்கு அப்புறப்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் உள்ள மெட்டாமைசர் இயந்திரம் மூலம் அகற்றப்படும் மீதமுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கும் மாநகர சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ,

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர்